முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***
***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**
**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 650**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.07.2021, சனிக்கிழமை

1. தென்னகம் தொட்டு இந்த பேருலகில்
திருவருளை கொண்டுவந்து உலகமாற்றம்
மண்ணுலகில் நடத்த மாஅவதாரம் புரிந்த
மகாஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
அருளுவேன் ஞான அறிவுரைஆசி
வரங்கள்பெற்று என் சக்தியாக நீவையகத்தில்
அவதாரம் நிகழ்த்தி இருப்பதால்
3. இருக்கவே உன்சொல்செயல் யாவும்
நிலமதனில் உன்தர்மம் யாவும்
ஐயன் என்தர்ம செயலாகும்
அனைத்தும் ஆறுமுகன்என் செயல்பாடுகளாகும்
4. ஆகவே அரங்கஞானியைகண்டு அனுதினம் பூஜைசெய்து
வணங்கும் மக்களுக்கு சகலகாரிய சித்தியும் சூட்சுமபலங்களும்
ஞானயோக சித்திகளும் அரங்கன்வழியில் அழியாமை என்கின்ற பேரானந்தகதியும்
கலியுகத்தில் இனிதேகிட்டி இந்தகலியுகமே ஞானயுகமாற்றமாக மாறக்கூடும்
5. மாறுதலை செய்யவல்ல அரங்கனே
மண்ணுலகின் சிறந்த ஞானி
ஆறுதல் அரங்கன்வழி பெற்றுவரும் மக்களெல்லாம்
அழியாமை பெற்று உலகில் ஞானிகளாகக்கூடும்
6. கூடவே தொடர்ந்து அரங்கஞானிகாட்டும் தர்மசாலை
குறைவின்றி பாதுகாத்து உலகோர் வழிநடத்திவர
நிறைவான புண்ணியபலன்கள்கூடி இந்தஉலகமே
நிலைத்தன்மை பெற்று சிறக்கும்
7. சிறக்கவே அரங்கன் வழி ஆறுமுகன் யான்
சித்திகளை வாரி வழங்கி வர
மறுக்காதுதொடர்ந்து அரங்கன்திருவடிபற்றிவர மண்ணுலகம் மகாயோகசித்தர்களின் வெளிப்பாடாகமாறி
மாறியே கலியுகம் சிறப்பு காணும் மகான் அரங்கனின் ஞான யுகமாக மாற்றம் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–